# Indian Polity Notes Part 11 in Tamil

## 11] மத்திய அரசின் ஆட்சி எல்லை

**சரத்து – 239**

- குடியரசுத் தலைவச் தன்னால் நியமிக்கப்படும் ஒரு ஆட்சியாளர் (Administratot) வழியாக நிர்வாகம் செய்கிறார்.
- யூனியன் பிரதேசங்கள் துணை ஆளுநர் (லெப்டினண்ட் கவர்னர்) முலம் குடியரசுத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது.
- குடியரசுத் தலைவர் ஒரு மாநிலத்தின் ஆளுநரை அந்த மாநிலத்தை ஒட்டியுள்ள மத்திய அரசின் ஓர் ஆட்சி எல்லைக்கு ஆட்சியாளராக நியமிக்கலாம். அவ்வாறு நியப்பிக்கப்படும் ஆளுநர் அம்மாநில அமைச்சரவையின் ஆலோசனையின்றி செயல்படலாம்.

**சட்டமன்ற / அமைச்சரவை உருவாக்குதல் (சரத்து – 239 – A)**

- புதுச்சேரிக்கு சட்டப்பேரவை, மற்றும் அமைச்சரவை உருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.
- தேர்ந்தெடுத்த அல்லது பகுதி நியமன, பகுதி தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றமாக செயல்படவும், அதிகாரம், பணிகள் சட்டம் இயற்றி உருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.
- பாண்டிச்சேரி என்பது புதுச்சேரி என 2006 - ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

**டெல்லி – சிறப்பு வகைமுறைகள் (சரத்து – 239 – AA)**

- டெல்லி தேசியத் தலைநகர் ஆகும்.
- 1911 – ம் ஆட்டில் 69 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி “தில்லி மத்திய அரசு ஆட்சி எல்லை” என்பதை “தேசிய தலைநகர ஆட்சி எல்லை” (National Capital Territery) என்று மாற்றப்பட்டது.
- சரத்து 239 – ன் படி நியமிக்கப்படும் அதன் ஆட்சியாளர் துணை நிலை ஆளுநர் (Lietenant Governor) என அழைக்கப்படுகிறார்.
- தேசியத் தலைநகர ஆட்சி எல்லை தில்லியில் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை ஒன்று இருத்தல் வேண்டும்.
- சட்டப்பேரவையில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை, பட்டியல் இனத்தவருக்கு இட ஒதுக்கீடு தேசிய தலைநகர எல்லை தொகுதி பிரிப்பு மற்றும் சட்டப்பேரவை செயல்காடுகள் தொடர்பான அனைத்தும் நாடாளுமன்ற சட்டத்தால் முறைப்படுத்தப்படும்.
- டெல்லி சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள (மாநிலப் பட்டியலில் உள்ள entry 1, 2, 18, 64, 65, 66, தவிர )அனைத்திலும் சட்டமியற்றலாம்.

- இவ்வாறு இயற்றப்படும் சட்டம் நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்திற்கு கட்டுப்பட்டது.
- சட்டப்பேரவையால் இயற்றப்படும் சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்திற்கு முரண்பட்டால், நாடாளுமன்ற சட்டம் முன்னிலை பெறும்.

  ஆனால், சட்டப்பேரவைச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்றிருந்தால் சட்டப்பேரவைச் சட்டம் முன்னிலை பெறும்.

- முதலமைச்சரை தலைவராக கொண்டு அமைச்சரவையின் அளவு 10 சதவீதத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- துணை நிலை ஆளுநருக்கும் அமைசர்களுக்கும் மாறுபட்ட கருத்து இருந்தால், துணை நிலை ஆளுநர் அதை குடியரசுத் தலைவரின் முடிவிற்கு ஏற்ப செயல்பட வேண்டும்.
- டெல்லி முதலமைச்சர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். மற்ற அமைச்சர்களையும் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- அமைச்சர்கள், குடியரசுத் தலைவர் விரும்பும் வரை அப்பதவியில் இருப்பர்.
- அமைச்சரவை குழு சட்டப்பேரவைக்கு கூட்டுப் பொறுப்பு கொண்டது.
- இது தொடர்பான, துணை, இடை, விளைவால் ஏற்படும் விடயங்களுக்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றி முறைப்படுத்தும் .
- தேசியத் தலைநகர ஆட்சி எல்லையின் நிர்வாகத்தை அரசியலமைப்பின்படி நடந்த முடிவில்லையென்றால் அதன் துணைநிலை ஆளுநர் அல்லது வேறு வகையில் இது குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பினால், குடியரசுத் தலைவர் 239 – AA – ன் செயலக்கத்தை நிறுத்தி வைக்கலாம்.

**நெருக்கடி நிலைப் பிரகடனம் (சரத்து – 239 – AB)**

- சரத்து 239 – AA –ன்படி தேசிய தலைநகர் ஆட்சி எல்லையில் நிர்வாகம் நடைபெறவில்லை என்று துணை நிலை ஆளுநர் அறிக்கை மூலமாகவோ அல்லது வேறு வகைணிலோ குடியரசுத் தலைவருக்கு தெரியவந்தால் நெருக்கடி / அவசரகால நிலையை பிரகடனப்படுத்தலாம்.
- இதன்படி, சரத்து 239 –AA அல்லது இதனடிப்படையில் இயற்றப்பட்ட சட்டங்களில் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கலாம்.

**அவசரகால சட்டம் பிறப்பித்தல் (சரத்து 239 – B)**

- புதுச்சேரி சட்டமன்றம் கூட்டத்தொடரில் இல்லாத போது, உடனடியாக தேவை என்று நிர்வாகி கருதினால் குடியரசுத் தலைவரின் அறிவுரையைப் பெற்று ஆட்சியாளர் / நிர்வாகி அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தலாம்..

- அந்த சட்டமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலோ அக்காலக் கட்டத்தில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கக் கூடாது.
- இந்த அவசரகாலச் சட்டம், சட்டமன்ற இயற்றும் சட்டத்திற்கு இணையானது,
- இந்தச்சட்டம், சட்டமன்றம் கூடிய பிறகு 6 வாரத்திற்குள் ஒப்புதல் பெற வேண்டும்.
- இதைக் குடியரசுத் தலைவரின் அறிவுரையைப் பெற்ற பிறகு ஆட்சியாளர் திரும்பப் பெறலாம்.

**மற்ற மத்திய ஆட்சி எல்லை**

- ஒரு ஆட்சியாளர் எப்பொழுது வேண்டுமானாலும் அவசரகாலச் சட்டம் பறப்பிக்கலாம். ஆனால் அது குடியரசுத் தலைவின் அறிவுறுத்தலின்படி பிரகடனப்படுத்த வேண்டும். இவ்வாறு பிறப்பிக்கப்படும் அவசரகால சட்டம் நாடாளுமன்றம் இயற்றும் சட்டமாக கருதப்படும்.

**சில யூனியன் பிரதேசங்களுக்கு ஒழுங்கு முறை உருவாக்கும் அதிகாரம் (சரத்து – 240)**

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், லக்சதீவுகள், தாத்ரா மற்றும் நாகர் ஹாவேலி, டாமன் மற்றும் டையூ, புதுச்சேரி ஆகியவற்றின் அமைதி, முன்னேற்றம் மற்றும் நல்ல அரசாங்கத்திற்கா குடியரசுத் தலைவர் ஒழுங்கு முறை விதிகளை வகுக்கலாம்.
- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்டமன்றம் உருவாக்கப்பட்டிருந்தால் குடியரசுத் தலைவர் இந்த ஒழுங்குமுறைகளை உருவாக்கக் கூடாது.
- அந்த சட்டமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலோ ஒழுங்கு முறைகளை உருவாக்கலாம்.

**மத்திய அரசின் ஆட்சி எல்லை உயர் நீதிமன்றம் (சரத்து – 241)**

- மத்திய அரசின் ஆட்சி எல்லைக்கென ஒரு உயர் நீதிமன்றம் அமைக்க அல்லது எந்த நீதிமன்றத்தையாவது அந்த ஆட்சி எல்லையில் ஒரு உயர் நீதிமன்றமாக விளம்ப நாடாளுமன்றம் சட்டமியற்றலாம்.

**5 ஆகத்து 2019 அன்று,** இந்திய நாடாளுமன்றத்தில் **ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019** நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பிரித்து ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரு ஒன்றியப் பகுதிகளை 31 அக்டோபர் 2019 முதல் நிறுவப்பட்டது. எனவே தற்போது மாநிலங்களின் எண்ணிக்கை 28 ஆக குறைந்தது.

- India has a total of 8 Union Territories and 28 states.
- The 8 Union territories of India include Delhi, Jammu & Kashmir, Ladakh, **Dadra and Nagar Haveli and Daman and Diu**, Puducherry, Chandigarh, Andaman and Nicobar Islands and Lakshadweep.
- Union Territories are special administrative sectors in the republic of India which operate directly under the central government.

- **Dadra and Nagar Haveli and Daman and Diu** are to be combined into a single union territory from 26th January 2020 as per legislation passed by the Government of India. This merger of these four areas was proposed to reduce administrative costs and duplication of services. Daman is set to be the capital of this new union territory.

winmeen.com